# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 23/2014** **நாள் : 09/10/2014**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

## போனஸ் பேச்சு வார்த்தை

மின் வாரிய ஊழியர்களுக்கு 2013 - 2014 ஆம் ஆண்டுக்கான போனஸ் வழங்குவது சம்மந்தமாக தொழிற்சங்கங்களோடு 7.10.2014 அன்று பேச்சு வார்த்தை நடைபெற்றது.

பேச்சு வார்த்தையில் மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பாக 2013 - 2014 ஆம் ஆண்டுக்கான கூடுதல் போனசுக்கான கோரிக்கையாக

1) வாரிய ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை 30% வழங்கிட வேண்டும்.

2) போனஸ் வழங்கும் சட்டத்தில் உள்ள ஊதிய வரம்புகளை கணக்கில் கொள்ளாமல் பொறியாளர்கள், அதிகாரிகள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் 30 சதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையும் வழங்கப்பட வேண்டும்.

3) 31.3.2014 வரை பணியாற்றும் நீதிமன்ற தீர்ப்புக்கு அப்பாலும் உள்ள பகுதி நேர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு நிரந்தர தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போல 30 சதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையும் வழங்கிட வேண்டும்.

4) மின் வாரியத்தில் 155 ஒப்பந்த தொழிலாளர்கள் தான் பணியாற்றுகின்றார்கள் என்று வாரியம் சொல்லும் வாதத்தை ஏற்றுக் கொள்ள இயலாது அனல், புனல், பொதுக்கட்டுமான வட்டம் மற்றும் விநியோகப்பகுதிகளில் சுமார் 6000 க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் அனைவரையும் அடையாளம் கண்டு போனசும் கருணைத் தொகை வழங்குவதற்குண்டான ஏற்பாட்டை செய்திட வேண்டும்.

அக்டோபர் 22 இல் தீபாவளிப் பண்டிகை வருகின்ற நிலையில் இன்னும் 15 தினங்களே உள்ளதையும் கணக்கில் கொண்டு கூடுதல் போனஸை 10.10.2014 க்குள் வழங்கிட வேண்டும்

என்றும் நமது கோரிக்கையை அரசிடம் கொண்டு சென்று அரசு ஆலோசித்துள்ள ஆலோசனைகளை திரும்பவும் தொழிற்சங்கத்திடம் பேசிய பின்னர் போனஸ் அறிவிப்பு அமைய வேண்டும் என நமது தரப்பில் வலிமையாக வாதிட்டோம்.

கோரிக்கையின் நியாயத்தை உணர்த்துகின்ற வகையில் கடந்த 10 ஆண்டுகளாக மின் வாரிய ஊழியர்களுக்கு 20 சதவீதம் மட்டுமே போனசும், கருணைத் தொகையும் வழங்கப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளில் அனைத்து பொருள்களின் விலையும் உயர்ந்துள்ளதோடு மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்துள்ளதையும் கணக்கில் கொண்டு கூடுதல் போனஸ் வழங்கிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். மேலும் மின் வாரியத்தில் 40000 க்கும் மேற்பட்ட பதவிகள் காலியாக உள்ளதையும் அந்த காலிப் பணியிடங்களை நிரப்பாததினால் மின் வாரியத்திற்கு 52 கோடி ரூபாய்க்கு மேல் மிச்சம் ஏற்படுகிறது என்றும் அதில் ஒரு பகுதியை மின் வாரிய ஊழியர்களுக்கு கூடுதல் போனஸாக வழங்கிட வேண்டும் என்று வாதிட்டோம்.

மின் வாரியத்தில் 2013 - 2014 ஆம் ஆண்டில் அதன் மொத்த வருமானம் ரூ. 26000/- கோடியில் இருந்து ரூபாய் 31000/- கோடி ரூபாயாகவும் மின்சாரம் கொள்முதல் செய்ய ரூ. 24000/- கோடியில் இருந்து ரூ. 30000/- கோடியாகவும் எரிபொருளுக்கு 6500/- கோடியில் இருந்து ரூ. 7800/- கோடியாகவும் தனியாரிடம் இருந்து மின்சாரம் வாங்க ரூ. 13000/- கோடி ரூபாய் செலவு செய்துள்ள போது, மின்சாரத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மட்டும் 20 சதவீதத்தில் இருந்து உயர்வு இல்லாதது எந்த விதத்தில் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றும் இவைகள் அடிப்படையில் ஏற்கனவே வழங்குகின்ற போனஸ் 20 சதவீதத்தை உயர்த்தித் தர வேண்டும் என வாதிட்டோம்.

வாரிய தொழிற்சங்கங்களின் கோரிக்கையை கேட்டு அது சம்மந்தமான ஆலோசனையை அரசிடம் கொண்டு சென்று வெகுவிரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் வாரியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. பேச்சு வார்த்தைக்கு பின்னர் 8.10.2014 அன்றே போனஸ் சம்மந்தமாக நடத்திய பேச்சு வார்த்தையின் விளக்க குறிப்புகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## போனஸ் நன்கொடை

மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்குகின்ற போனசில் ரூ. 200/- ஐ சங்கத்திற்கு நன்கொடையாக வசூலித்திட வேண்டும். வசூலான தொகையில் 50 சதவீதம் கிளைகளுக்கு 50 சதவீதம் மாநில மையத்திற்கும் என்ற அடிப்படையில் போனஸ் நன்கொடையை முழு வீச்சுடன் வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். அதற்குண்டான இரசீது புத்தகங்கள் மாநில மையத்திலிருந்து கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கூடுதல் போனஸ் வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையின் மீது அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 7.10.2014 இல் சென்னையில் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. பல மாவட்டங்களிலும் அப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாக தகவல்கள் வந்து கொண்டுள்ளன. சில மாவட்டங்களில் வேறு சில நாட்களில் நடத்து வதற்குண்டான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக செய்திகள் உள்ளன. அவ்வாறு நடைபெறும் ஆர்ப்பாட்டத்திலும் மத்திய அமைப்பு ஊழியர்கள் கணிசமாக கலந்து கொள்ளுவதற்கான ஏற்பாட்டை செய்திட வேண்டுகிறோம்.

## என்.சி.சி.ஓ. சங்கங்களின் 14.10.2014 கூட்டு ஆர்ப்பாட்டம்

மின்சார சட்டம் 2003 அமலாக்கிய மாநிலங்களில் மின்வெட்டும், மின்சார கட்டண உயர்வு மட்டுமே பலனாக கிடைத்துள்ளது என்ற அனுபவத்தை கணக்கில் கொண்டு மின்சார சட்டம் 2003 ல் தேவையான மாற்றங்களை கோரியும் மின்துறையில் நிரந்தர தன்மை வாய்ந்த பணிகளில் ஒப்பந்த, அவுட்சோர்சிங் தொழிலாளிகளை ஈடுபடுத்தி உழைப்புச் சுரண்டலை மின்துறையில் அரங்கேற்றுவதை கண்டித்தும் தேசிய மின்சார தொழிலாளர், பொறியாளர் கூட்டமைப்பின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் என்ற அறைகூவலின் அடிப்படையில் தமிழகத்தில் மத்திய அமைப்பு, சம்மேளனம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், பொறியாளர் கழகம், பொறியாளர் சங்கம், பொறியாளர் அமைப்பு ஆகியோர்கள் கூட்டாக 14.10.2014 அன்று அனைத்து மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு முன்னால் பிரச்சாரக் கூட்டம் நடத்துவது என்ற அடிப்படையில் பெரும்பாலான திட்டங்களில் கூட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. அந்த கூட்டு இயக்கத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

## டெல்லி பாராளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம்

மின்சார சட்டம் 2003 இல் தேவையான மாற்றங்களை செய்திடுக. மின் வாரிய நிரந்தரப் பணிகளில் ஒப்பந்த அவுட்சோர்சிங் முறையில் தொழிலாளர்கள் சுரண்டாதே என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்து தேசிய மின்சார பொறியாளர் மற்றும் தொழிலாளர்கள் கூட்டமைப்பின் சார்பாக 8.12.2014 இல் பாராளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் என்ற அறைகூவல் விடப்பட்டுள்ளது. டெல்லி ஆர்ப்பாட்டத்தில் மத்திய அமைப்பைச் சார்ந்தவர்கள் பெருமளவில் கலந்து கொள்வதற்குண்டான ஏற்பாட்டை செய்திட வேண்டியுள்ளது.

## சி.ஐ.டி.யு., வி.ச., வி.தொ.ச,
## இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு கூட்டு கருத்தரங்கம்

கட்டுப்படியான விலையில் மின்சாரம், மின்சார சட்டம் 2003 ஐ மறு பரிசீலனை செய்திடுக. அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம், தமிழகத்தில் நிலவும் மின்வெட்டு, மின்சார கட்டண உயர்வு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்வது போன்ற முழக்கங்களை முன் வைத்து சி.ஐ.டி.யு., வி.ச., வி.தொ.ச., இ.இ.எப்.ஐ., ஆகிய அமைப்புகளின் சார்பாக கருத்தரங்கு நடத்திட வேண்டும் என்ற முடிவினை தமிழகத்தில் அமல்படுத்தும் விதமாக சென்னை, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நகரங்களில் கருத்தரங்குகளை நடத்திட ஏற்பாடு செய்திட வேண்டியுள்ளது.

மேலும் வருகின்ற 17.10.2014 அன்று கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தையும், கல்வியையும் பாதுகாத்து வரும் 100 நாள் வேலை திட்டத்தை பாதுகாக்கும் வகையில் ஒன்றிய அளவில் நடைபெறும் இயக்கத்திலும், ஐ.சி.டி.எஸ். -யை பாதுகாத்திட நடைபெறும் கையெழுத்து இயக்கத்திலும் மின்வாரிய ஊழியர்கள் பங்கேற்றிட முன் முயற்சியை கிளைகள் மேற்கொள்ள வேண்டும்.

## புதிய பதவிகளை அனுமதிப்பது

9.1.2014 ஒப்பந்தத்தில் அடிப்படையில் 31.12.2013 வரை உள்ள மின் இணைப்புகளுக்கு புதிய பதவிகளை அனுமதிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டி அதனை

உடனடியாக அனுமதித்திட வேண்டி வலியுறுத்தியுள்ளோம். வாரியமும் துரித நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கூறியுள்ளது.

## வல்லூர் அனல் மின் நிலைய சிறப்பு பேரவை

தேசிய அனல் மின் கழகமும், மின்சார வாரியமும் இணைந்து துவங்கியுள்ள வல்லூர் அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களும், தென் மாநிலங்களில் உள்ள தேசிய அனல் மின் கழகத்தில் பணியாற்றும் நமது சங்க பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் சிறப்பு பேரவை 5.10.2014 அன்று நடைபெற்றது. அதில் சி.ஐ.டி.யு. வின் அகில இந்திய செயலாளர்களில் ஒருவரும், இந்திய மின் கூட்டமைப்பின் செயல் தலைவரும், கௌரவ தலைவருமான தோழர் ஸ்விடிஸ் தேவ்ராய் அவர்களும் சி.ஐ.டி.யு. வின் தமிழ் மாநில பொதுச் செயலாளர் தோழர் ஜி. சுகுமாறன் அவர்களும் துணை பொதுச்செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்களும் கலந்து கொண்டனர்.

## மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம்

மாநில சி.ஐ.டி.யு. வின் வழி காட்டுதல் அடிப்படையில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் இடைக்கால ஸ்தாபன பரிசீலனைக்காக மத்திய அமைப்பின் மாநில செயற்குழு சென்னையில் எதிர்வரும் அக்டோபர் 25, 26 (சனி மற்றும் ஞாயிற்றுகிழமை) தேதிகளில் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் நிர்வாகிகள் மாநில செயற்குழு உறுப்பினர்கள் பயண ஏற்பாடுகளை செய்வதோடு இடைக்கால ஸ்தாபன பரிசீலனை அறிக்கைக்கு உதவும் வகையில் கிளை மையம், நிர்வாகிகள் கூட்டம், செயற்குழு, மாநில செயற்குழு, கிளை நிர்வாகிகள், செயற்குழு கூட்டங்களில் மாநில நிர்வாகிகள் கலந்து கொள்ளும் விபரங்களை 15.10.2014 க்குள் அனுப்பி வைத்திட உதவிட வேண்டுமாய் கேட்டு கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுபபாரமணயன்)**
பொதுச் செயலாளர்